**C.C. No. 4/2025**

**Deposition of P.W. 1**

**Dated : 15.10.2025**

**Name : Thiru. Sankarapandi**

Solemnly affirmed by Assistant Tmt. Sheeba

**1ம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

29.12.2022 காலை முதல் மாலை வரை எந்த பீட்டில் பணியில் இருந்தேன் என்றால், ரோஸ்மியாபுரம் பீட். பணியில் இருந்தபோது யார் என்னை தணிக்கை செய்வதற்கு உத்தரவு வழங்கினார்கள் என்றால், அ.சா. 2 மாலை 3.30 மணிக்கு உத்தரவிட்டார். உதவி வன பாதுகாவலர் என்னை தொடர்பு கொண்டாரா என்றால், இல்லை. சம்பவ இடத்தில் இருந்து ரோஸ்மியாபுரம் பீட் எவ்வளவு தொலைவு இருக்கும் என்றால், சுமார் 8km தொலைவு இருக்கும். எத்தனை மணிக்கு ஒன்று கூடி தணிக்கையை ஆரம்பித்தோம் என்றால், மாலை 04.00 மணியளவில் சிவகாமிபுரம் பகுதியில் ஒன்று கூடி தணிக்கையை ஆரம்பித்தோம். சிவகாமிபுரத்தில் உள்ள உப்பு ஓடை மற்றும் குட்டிக்குளம் பகுதி வனப்பகுதி இல்லை என்றால், சரிதான். அந்த பகுதியை சுற்றி தனியாருக்கு சொந்தமான வீட்டு மனைகள் உள்ளது என்றால், சரிதான். சற்று தொலைவில் உள்ளது. அந்த பகுதியில் இருந்து வீட்டுமனைகள் எவ்வளவு தொலைவில் அமைந்துள்ளது என்றால், ஞாபகம் இல்லை. குட்டிக்குளம் பகுதியில் இருந்து சிவகாமிபுரம் மேலத்தெரு எந்த திசையில் உள்ளது என்றால், கிழக்கு திசையில் உள்ளது. நாங்கள் அரசுக்கு சொந்தமான வாகனத்தில் சம்பவ

இடத்திற்கு சென்றோம் என்றால், சரிதான். நான் சிவகாமிபுரம் பீட் பகுதியில் இருந்து கிளம்பினேன். அப்போது என்னுடன் மற்ற சாட்சிகள் உடன் இருந்தார்கள். சம்பவ இடத்தில் எவ்வளவு நேரம் நான் இருந்தேன் என்றால், சுமார் 1 மணிநேரம் இருந்தேன். சம்பவ இடத்தில் இருந்து வேட்டையாடப்பட்ட இடம் எவ்வளவு தொலைவு என்று தெரிந்துகொண்டேனா என்றால், இல்லை. 2வது எதிரியிடம் ஒப்புதல் வாக்குமூலம் எப்போது தொடங்கி முடிக்கப்பட்டது என்றால், 04.40 மணியில் இருந்து 4.55 மணிக்கு முடிக்கப்பட்டது. எதிரிகளை பார்த்த இடத்தில் சமைப்பதற்கு பயன்படுத்திய மசாலா பொருட்களை கைப்பற்றினோமா என்றால், இல்லை. சம்பவ இடத்தில் அடுப்பு மூட்டுவதற்கு கற்கள் வைக்கப்பட்டிருந்தது. தீப்பெட்டி மற்றும் விறகு பொருட்கள் அருகில் இருந்ததா என்றால், இருந்தது. சம்பவ இடத்தில் அடுப்பு மூட்டுவதற்கான கல் வைக்கப்பட்டிருந்ததை நான் தயார் செய்த எந்த ஆவணத்திலும் சொல்லவில்லை என்றால், சரிதான். குட்டிக்குளம் பகுதியில் எந்த திசையில் எதிரிகள் அடுப்பை எரிக்க முயற்சித்தார்கள் என்று ஞாபகம் இல்லை. இறந்த உயிரினம் எத்தனை துண்டுகளாக வெட்டப்பட்டிருந்தது என ஞாபகம் இல்லை. தோல் மற்றும் தலை பகுதி எதிரிகளிடமே இருந்து கைப்பற்றப்பட்டது. 2ம் எதிரியின் ஒப்புதல் வாக்குமூலத்தில் தோல் மற்றும் தலைப்பகுதி இருந்ததாக குறிப்பிட்டு சொல்லப்படவில்லை என்றால், சரியல்ல. வன

உயிரின மருத்துவருக்கு அனுப்பி அறிக்கை எதுவும் பெறவில்லை என்றால், சரிதான். வழக்கில் நான் 4 ஆவணங்கள் தயார் செய்துள்ளேன். வேட்டைத்தடுப்பு காவலர்கள் எந்த ஆவணத்தில் கையொப்பம் செய்தார்கள் என்றால், ஸ்தல மகசர் மட்டும் கையெழுத்து செய்தார்கள். உதவி வன பாதுகாவலர் எத்தனை கையொப்பம் செய்தார் என்றால், ஸ்தல மகசரில் மட்டும் கையொப்பம் செய்தார். சம்பவ இடத்திற்கு சிவகாமிபுரம் ஊர் வழியாக சென்றோம். எதிரிகளை கைது செய்த விபரம் பற்றி பணகுடி காவல்நிலையத்திற்கு தகவல் சொன்னேன். வனக்குற்ற அறிக்கையில் தகவல் சொன்னது குறித்து குறிப்பிடவில்லை என்றால், சரிதான். நான் சம்பவ இடத்திற்கு செல்லவில்லை என்றும், 2ம் எதிரியை அங்கு வைத்து கைது செய்யவில்லை என்றும், சம்பவ இடத்தில் இறந்த உயிரினத்தின் தோல் மற்றும் தலை ஆகிய கழிவு பாகங்களை கைப்பற்றவில்லை என்றால், சரியல்ல. யாரோ அளித்த தவறான தகவலின் அடிப்படையில் எதிரிகள் மீது பொய்யாக வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால், சரியல்ல. வேட்டைத்தடுப்பு காவலர் சரவணன் என்பவருக்கும் எதிரிகளுக்கும் உள்ள முன்விரோதத்தின் காரணமாக பொய்யாக எதிரிகள் மீது வழக்கு பதிவுசெய்யப்பட்டுள்ளது என்றால், சரியல்ல. 1ம் எதிரி சம்பவ இடத்திற்கு வரவில்லை என்றாலும், அவர் பொய்யாக வழக்கில் சேர்க்கப்பட்டுள்ளார் என்றால், சரியல்ல. அலுமினிய சட்டி, கரண்டி மற்றும் கத்தி ஆகியவை வழக்கிற்காக

உருவாக்கப்பட்டவை என்றால், சரியல்ல. எந்த ஆவணத்திலும் கத்தியை எந்த எதிரி பயன்படுத்தி வெட்டினார் என குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால், சரிதான். எந்த ஆவணத்திலும் எதிரிகள் கைது செய்வதற்கு முன்பு எந்த நேரத்தில் வேட்டையாடினார்கள் என்று குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால், சரியல்ல. 03.30 மணிக்கு சென்றதாக சொல்லியுள்ளேன். வேட்டையாடிய இடத்தில் CSI Report தயார் செய்யவில்லை என்றால், சரிதான். ஆவணங்கள் அனைத்தும் அலுவலகத்தில் வைத்து தயார் செய்யப்பட்டது என்றும், பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும், சரியல்ல.